தேதி **- 01.11.2023**

அசல் வழக்கு எண்**.282/2022**

வா**.**சா**. 1 -** ராமர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிராமணத்தன் பேரில் முதல்விசாரணை தொடர்ச்சி

இவ்வழக்கை நான் தாக்கல் செய்த பின்னர் தாவாச் சொத்தை பிரதிவாதி வேறு நபருக்கு விற்பனை செய்துள்ளார், அதற்கான வில்லங்க சான்று வா**.**சா**.**ஆ**.5** ஆகும். மேலும், பிரதிவாதிக்கு நான் 10.05.2018 ல் அன்று ரூ.1,90,000/-மும், ரூ.10,000/-மும் கொடுத்துள்ளேன். அதேபோல் 14.09.2018 அன்று ரூ.2,00,000/-மும், 29.09.2018 அன்று ரூ.3,00,000/- மும், 03.10.2018 அன்று ரூ.2,00,000/-மும், 22.01.2019 அன்று ரூ.2,00,000/-மும் கொடுத்ததை பிரதிவாதி பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பு எழுதி கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். அப்பொழுது பிரதிவாதியின் சொந்தக்காரரான திரு.செல்வம் என்பவர் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். மேற்சொன்ன குறிப்புகள் வா**.**சா**.**ஆ**.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்க வேண்டும் என்று பிராத்திக்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.